**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண் : 63** **நாள்: 03.05.2019**

**சென்னைப் பள்ளிகளில் மாணவ, மாணவியர்களின் சேர்க்கையை அதிகரிக்கவும், கல்வித்தரத்தை மேம்படுத்தவும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையானது, 1912ம் ஆண்டு 40 தொடக்கப்பள்ளிகளோடு துவங்கி, தற்பொழுது 211 சென்னை தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், 70 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் என மொத்தம் 281 பள்ளிகள் மிகச்சீரிய முறையில் இயங்கி வருகின்றது. இவற்றில் 83,619 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையில் இயங்கும் பள்ளிகள் ஏழை, எளிய குறிப்பாக குடிசைவாழ் பகுதிகளில் வசிக்கும் மக்களின் கல்வித்தேவையினை பூர்த்தி செய்து வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் அனைவருக்கும் தரமான கல்வியை வழங்குவதே முக்கிய நோக்கமாக கொண்டு செயல்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் மாணவ, மாணவியர்களின் கல்வித்தரத்தினை உயர்த்தும் வகையில் அனைத்து பள்ளிகளிலும் ஆய்வக வசதிகள், நூலக வசதிகள், அனைத்து மாணவர்களுக்கும் கணினி கல்வி அளித்தல், நடுநிலைப்பள்ளிகளில் தொழில் கல்வி கற்பித்தல் மற்றும் விளையாட்டு திறமைகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு ஆக்கப்பூர்வமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மேலும், மாணவர்களை ஊக்கப்படுத்தும் விதத்தில் 12ம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்களின் உயர்கல்விக்கு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் சார்பில் சென்னைப் பள்ளிகளில் மாணவ, மாணவியர்களின் சேர்க்கையை அதிகரிக்கவும், கல்வித்தரத்தை மேம்படுத்தவும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் இன்று (03.05.2019) ரிப்பன் மாளிகை வளாகத்தில் உள்ள அம்மா மாளிகையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஆணையாளர் அவர்கள் தெரிவித்ததாவது: இன்றைய குழந்தைகளே நாளைய சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரங்கள், அவர்களுக்கு எவ்வித இடர்பாடும் இன்றி

மகிழ்ச்சி நிறைந்த சூழ்நிலையில் தரமான ஆரோக்கியமான கல்வியை வழங்குவதே மாநகராட்சியின் முக்கிய நோக்கமாகும்.

நல்ல ஆரோக்கியமான கல்விச்சூழலை மாநகராட்சி பள்ளிகளில் மாணவர்களுக்கு உருவாக்கும் வகையில் பள்ளிகளில் தரமான உட்கட்டமைப்பு, சுத்தமான குடிநீர், கழிவறைகள், விளையாட்டு உபகரணங்கள் போன்றவற்றை நல்ல முறையில் பராமரிப்பதை தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் உறுதி செய்ய வேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களின் அறிவுத்திறன், செயலாற்றல் ஆகியவற்றை ஊக்குவித்து வளரச் செய்து, அவர்களது செயல் மற்றும் சிந்திக்கும் திறனை முழு அளவில் வெளிக்கொணர வேண்டும். மாணவர்கள் தாங்கள் கற்றவற்றை வெளியுலக நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தும் வகையில் அறிவும் ஆற்றலும் உருவாக்க வேண்டும். மாறிவரும் சூழலுக்கேற்ப தேவைகளின் அடிப்படையில் புதிய கருத்துக்களை கற்றல், கற்பித்தலில் மாறுதல் செய்ய வேண்டும். எவ்விதப்போட்டி தேர்வுகளையும், எதிர்கொள்ளும் வகையில் மாணவர்களின் திறனை முழுமையாக வளர்த்திட வேண்டும்.

மேலும், மாநகராட்சி பள்ளிகளில் தரமான கல்வியினை வழங்குவதை உறுதிசெய்யும் வகையில் கல்வி அலுவலர், கூடுதல் கல்வி அலுவலர், உதவி கல்வி அலுவலர் மற்றும் தலைமையாசிரியர்களை உள்ளடக்கிய வழிகாட்டுதல் குழு அமைத்து, இக்குழுவின் அறிவுரைகளின்படி அனைத்து விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் துணை ஆணையாளர் (கல்வி) திரு.பெ.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., அவர்கள், கல்வி அலுவலர் திரு.இ.கோவிந்தசாமி, கூடுதல் கல்வி அலுவலர், உதவி கல்வி அலுவலர்கள், தலைமையாசிரியர்கள், ஆசிரியை ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**